செயலாற்றுகை அறிக்கை - 2022



சனாதிபதி செயலகம்

செயலாற்றுகை அறிக்கை -2022

நிறுவனத்தின் பெயர் : சனாதிபதி அலுவலகம்

செலவுத் தலைப்பு இலக்கம் : 01

பொருளடக்கம்

உள்ளடக்கங்கள்			பக்க இலக்கம்
அத்தியாயம் 01	-	நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	2
அத்தியாயம் 02	-	2022 முன்னேற்றம் மற்றும் 2023 எதிர்கால கண்ணோட்டம்	5
அத்தியாயம் 03	-	2022 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலற்றுகை	33
		கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதாணிப்புக்கள்	38
அத்தியாயம் 04	-	செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டப் பிரகாரம்)	47
அத்தியாயம் 05	-	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை	57
அத்தியாயம் 06	-	மனித வள விபரம்	59
அத்தியாயம் 07	-	இணக்க அறிக்கை	61

01 அத்தியாயம்

நிறுவன விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

தொலைநோக்கு

"2048 இல் முழுமையாக அபிவிருத்தியடைந்த இலங்கை"

செயற்பணி

அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அனைத்து நோக்கங்கள் மற்றும் இலக்குகளை செயற்திறனுடனும் உற்பத்தி

நோக்கம்

I. மாண்புமிகு சனாதிபதியவர்களின் தொலைநோக்கினை யதார்த்தமாக்குவதற்காக உற்பத்தி திறன், செயற்திறன் மற்றும் செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்தல்.

II. அரசியலமைப்பு மற்றும் பல்வேறு சட்டங்களினால் மாண்புமிகு சனாதிபதியவர்களால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை அச்சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்திறன் மற்றும் ஊக்கத்துடன் நிறைவேற்றுவதற்காக உதவுதல்.

III. சனாதிபதி அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை உற்பத்தி திறனுடன் முன்னெடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

IV. அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்குரிய அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு வசதிகளை வழங்குதல்.

V. சனாதிபதி அலுவலகத்துக்கு ஏற்புடைய சகல முகாமைச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்புடன் முன்னெடுத்தல்.

VI. நிர்வாக துஸ்பிரயோகம், குறைபாடுகள் அல்லது தாமதம் காரணமாக இடம்பெற்றுள்ள மக்கள் துன்பங்கள் / பிரச்சினைகளைக் குறைத்தல்.


VII. வறுமையை ஒழித்தல் மற்றும் அபிவிருத்திப் பிரச்சினைகளுக்குத் தேவையான உபாயவழிமுறை தலையீட்டை மேற்கொள்ளல்.

VIII. இற்றைப்படுத்தப்பட்ட தரவு பிரவேசத்தை உருவாக்குவதன் மூலம் மக்களுக்கு நன்மையளிப்பதை செயற்திறனுடன் மேற்கொள்ளல்.

IX. உற்பத்தி திறனுடன் அரச நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்வதன் மூலம் மக்கள் நன்மையடையக் கூடிய வாய்ப்புக்களை அதிகரித்தல்.

X. மக்கள் நலனோம்புகையினை உறுதிசெய்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள பிரதான பிரிவுகள்

1)பணியாட்டொகுதி பிரதானி பிரிவு

2)சனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் அலுவலகம்

3)சனாதிபதியின் செயலாளர் பணியகம்

4)அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு

5)பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் பிரிவு

6)மனித வளங்கள், நிர்வாக மற்றும் போக்குவரத்துப் பிரிவு

7)பொருளாதார அலுவல்கள் பிரிவு

8)உபாய வழிமுறைகள் அலுவல்கள் பிரிவு

9)உணவுப் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்ட அபிவிருத்தி பிரிவு

10)விவசாய உற்பத்தி திறன் மற்றும் சுற்றாடல் பிரிவு

11)நிறுவன ஒருங்கிணைப்பு பிரிவு

12)தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தல் பிரிவு

13)உள்ளக கணக்காய்வுப் பிரிவு

14)வட மாகாண ஒருங்கிணைப்பு பிரிவு

15)சமூக அலுவல்கள் பிரிவு

16)கணக்கு மற்றும் நிதிப் பிரிவு

17)அபிவிருத்தி ஒருங்கிணைப்பு பிரிவு

18)பொருளாதார உறுதிப்பாட்டுப் பிரிவு

19)சட்ட அலுவல்கள் பிரிவு

20)சனாதிபதி ஊடகப் பிரிவு

21)விசேட கருத்திட்டப் பிரிவு

22)மக்கள் தொடர்புகள் பிரிவு

23)சனாதிபதி தொழிற்சங்க உறவுகள் பிரிவு

24)ஒம்பூட்ஸ்மன் அலுவலகம்

25)சனாதிபதி நிதியம்

1.6 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

- சனாதிபதி நிதியம்
- கொவிட்—19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் (2022.10.28 முதல் முடிவுறுத்தப்பட்டது)

02 அத்தியாயம்

2022 முன்னேற்றம் மற்றும் 2023 அவுட்லுக்

2.1 முன்னேற்றம்

2.1.1 கொள்கை வழிகாட்டல்

2019-2022 காலப்பகுதியில் உலகம் பூராக பரவிச் சென்ற கொவிட்-19 தொற்று நோய் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பூகோள பொருளாதார நெருக்கடி இலங்கையின் வெளிநாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய நடைமுறைக் கணக்கு போன்றே வரவு செலவுப் பிரிவில் குறைநிலையினை உருவாக்குவதற்கும், அது பாரதூரமான பொருளாதார பின்னடைவு வரை விருத்தியடைவதற்கும் காரணமாக அமைந்தது. பொருளாதார வளர்ச்சி வேகம் 2022 ஆண்டின் முதலாவது காலாண்டில் 0.5 % சதவீதம் வரை வீழ்ச்சியடைந்ததுடன் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் பிரகாரம் மதிப்பிடுகையில் பணவீக்கம் அக்கால கட்டத்தில் 21.5% சதவீதம் வரை உயர்வடைந்தது. அதனோடு இணைந்த அத்தியவசிய பண்டங்களின் பற்றாக்குறை காரணமாக சிவில் சமூகத்தின் சுமுக வாழ்வின் இருப்புக்கு பாரதூரமான தடையாக அமைந்தது. 2022 டிசம்பர் மாதமளவில் பொருளாதார வளர்ச்சி வேகம் 7.8 % சதவீதம் வரை சுருங்கியதுடன் பணவீக்கம் 59.2 % சதவீதம் வரை உயர்வடைந்தது.

2022 ஆகஸ்ட் மாதமளவில் நிலவிய நெருக்கடி நிலைமையை துரிதமாக சரி செய்வதற்காகவும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகவும் தற்போதைய சனாதிபதி அவர்களால் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால திட்ட உபாயவழிமுறைகளை உள்ளடக்கிய கொள்கைத்திட்டம் முன்னெடுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. அந்த கொள்கைத் திட்டத்தில் பின்வரும் நான்கம்சப் பிரவேசம் உள்ளடகக்ப்பட்டது;

1) பெரும்பாகப் பொருளாதார உறுதிப்பாட்டை வழமை நிலைக்கு கொண்டுவரல்.
2) பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்புதல்
3) மக்களிடம் பயனுள்ளவாறு பிரவேதித்தல்
4) நிறுவனம் சார் மறுசீரமைப்பு

1) பெரும்பாகப் பொருளாதார உறுதிப்பாட்டை வழமை நிலைக்கு கொண்டுவரல்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் பணியின் போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளல், வெளிவாரி ஒத்துழைப்பை பலப்படுத்தல், கடன் மறுசீரமைப்பு, அந்நிய செலாவணி திரவத்தன்மையை பேணுதல் மற்றும் அத்தியவசிய இறக்குமதிக்காள நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய துறைகளில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சனாதிபதி அலுவலகம் தொடர்ச்சியான தலையீட்டை மேற்கொண்டது.

- சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் முதன் முறையாக முன்னாள் சனாதிபதியவர்களின் கீழ் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய சனாதிபதியவர்களின் கீழ் சுமார் 2.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் நீடித்த கடன் வசதியின் (Extended Fund Facility / EFF) கீழ் 48 மாத ஏற்பாடுகளுக்காக இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் 2022 செப்டம்பர் மாத ஆரம்பத்தில் உத்தியோகபூர்வ மட்டக் கலந்துரையாடலை ஆரம்பித்தது.

- வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் மற்றும் சேவைப்படுத்தலுக்கான திரவத்தன்மையுள்ள அந்நிய செலாவணி ஒதுக்கு போதாமையினைக் கருத்திற் கொண்டு அரசு 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி அரசின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செய்தல் நிறைவடையும் வரை தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவை கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்தது. பின்னர் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செய்யும் செயன்முறை தொடர்பாக இந்தியா, சீனா, மற்றும் பரிஸ் சமூகம் (Paris Club) உள்ளிட்ட உத்தியோகபூர்வ கடன்கொடுநர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களை 2022 ஆம் ஆண்டு இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு நோக்கி வெற்றிகரமாக வழிநடாத்துவதற்கு முடிந்தது.

- அந்நிய செலாவணி உட்பாய்ச்சல் பலவீனமடைதல் மற்றும் அத்தியவசிய இறக்குமதிக்காக பகுதியளவில் நிதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி தொடர்ச்சியாக அந்நிய செலாவணியை வழங்குதல் காரணமாக மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கு தீர்க்கமானதாக குறைவடைந்து சென்றது.

அமெ.பி.டொ

	2021	2022
மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கு	3.14	1.90
ஏற்றுமதி உழைப்பு	12.50	13.11
வெளிநாட்டில் பணிபுரியும் நபர்களின் பண அனுப்புதல்	5.49	3.79
சுற்றுலாத் துறை உழைப்பு	0.51	1.14
வர்த்தக நிலுவை	8.14	5.19

ஏற்றுமதி உழைப்பு அதிகரிப்புடன் ஒப்பிடும் போது இறக்குமதி செலவினம் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைதல், இறக்குமதி உள்ளீடுகள் குறைக்கப்பட்ட ஏற்றுமதி உழைப்பு செயன்முறை ஒன்றை ஏற்படுத்தல் மற்றும் வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் அனுப்புதல்கள் அதிகரித்தல் போன்ற விடயங்கள் காரணமாக வர்த்தக நிலுவை ஒடுங்கும் நிலைக்கு உட்பட்டது. அதன் பிரகாரம் 2022 ஒக்டோபர் மாதமளவில் 1705 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகக் குறைந்த அளவு வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கினை 2022 டிசம்பர் மாதம் இறுதியில் மீடும் நிலையானதாக கட்டியெழுப்பி 1898 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிக்க முடிந்தது.

- அவ்வாறே வெளிநாட்டில் குடிபெயர்ந்துள்ள இலங்கையின் தொழில்வாண்மையாளர்கள் அனுப்பும் பண அனுப்புதல்கள் வங்கி முறைமையின் ஊடாக இலங்கைக்கு அனுப்புவதை ஊக்கப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக 2022 ஆம் ஆண்டு அந்த பணஅனுப்புதல்களின் பெறுமதியையும் அதிகரிப்பதற்கு முடிந்தது.

- ஒரு நாட்டின் அந்நிய செலாவணி ஒதுக்கினை அதிகரிப்பதற்காக பெரிதும் முக்கியம் பெறும் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான ஒரு மறுமர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் அரசால் முடிந்தது. கௌரவ சனாதிபதியவர்களின் வழிகாட்டல் பிரகாரம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 719,978 என்பதுடன் அது முன்னைய ஆண்டில் வருகை தந்த 194,495 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 270% சதவீத அதிகரிப்பு ஆகும். அதன் மூலம் சேகரிக்க முடிந்த அந்நிய செலாவணி ஆரம்ப கணக்கின் மீதியை குறைப்பதற்காக முக்கிய பங்காற்றியுள்ளது. விசேடமாக மத்தள சர்வதேச விமான நிலையத்தை 2022 டிசம்பர் மாதம் முதல் மொஸ்கோ உள்ளிட்ட ஐரோப்பா பயண முடிவிடங்களுடன் தொடர்புபடுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒவ்வொரு வாரமும் சுமார் 1200 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டுக்கு வருகை தரல் தற்போது இடம்பெற்று வருகிறது.

மேற்குறித்த அனைத்து தலையீடுகளினதும் பயனாக இலங்கையின் பொருளாதாரத்தை 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் ஓரளவு உறுதிப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு முடிந்தது. விசேடமாக எரிபொருள், உரம், எரிவாயு மற்றும் மருந்து ஆகிய அத்தியாவசிய விநியோகங்களை முகாமை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தலையீடு காரணமாக நாட்டில் மக்களது வாழ்வு வழமை நிலைக்கு திரும்பும் அளவிலான வெற்றிகரமான தீர்வுகளை வழங்க முடிந்தது.

- **நட்புறவான சர்வதேச ஒத்துழைப்பு** – அனைத்து நாடுகளுடனும் சினேகபூர்வ மற்றும் நட்புறவான வெளிநாட்டுக் கொள்கை ஒன்றைப் பின்பற்றுவதற்கான ஓர் அரச பொறிமுறை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை முன்னெடுக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு உலகப் பொருளாதாரம் மற்றும் அரசியல் பின்னணியில் உருவாகிய நெருக்கடியான மற்றும் பின்னடைவு ஆகியவற்றுக்கு மத்தியிலும் கூட அனைத்து நாடுகளும் எம்மைக் கைவிடாதவாறு தக்கவைத்துக் கொள்வதற்கு எமது வெளிநாட்டுக் கொள்கை ஏதுவாக அமைந்தது. விசேடமாக பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கான முயற்சியின் போது கடன் மறுசீரமைப்புக்காக ஏற்புடைய அனைத்து நாடுகளும் சாதகமான பதில் வழங்கியதிலிருந்து எமது பிரவேசம் வெற்றியளித்துள்ளதென்பது தெளிவாகிறது.

- 2022.01.01 முதல் 2022.07.20 வரை சனாதிபதியாக செயற்பட்ட கௌரவ கோடாபய ராஜபக்ஸ அவர்களால் ரஷ்யா ஒன்றியம், ஈராக், சவுதி அரேபியா, ஐக்கிய அமெரிக்க குடியரசு, நேபாளம், பங்கலாதேஷ், எகிப்து, ஜப்பான், இந்தியா, சீனா, பாகிஸ்தான், தென்கொரியா, ஈரான், ஐரோப்பா சங்கம், அவுஸ்திரேலியா, கனடா, மற்றும் 8 மத்திய கிழக்கு நாடுகளுடன் இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடி, இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

- அவ்வாறே சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (ஐனுயு)இ சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு) ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் ஆசியான் நாடுகளின் தூதுவர்களுடன் கலந்துரையாடி தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான பல்தரப்பு ஒத்துழைப்பு கோரப்பட்டது.

- 2022.07.21 முதல் சனாதிபதியாக பதவி வகிக்கும் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கீழ் சர்வதேச அலுவல்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அமெரிக்கா ஐக்கியக் குடியரசின் சிரேஷ்ட பிரதிநிதிகள் இந்த நாட்டில் மேற்கொண்ட விசேட சுற்றுப்பயணங்கள் சிலவற்றுக்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகள் சங்கம், ஐரோப்பா சங்கம், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் ஆகிய முன்னணி பல்தரப்பு அமைக்களின் பிரதிநிதிகளுக்கும் கௌரவ சனாதிபதி அவர்கள் தனது விருந்தோம்பலை வெளிக்காட்டினார். அவ்வாறே இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா போன்ற நெருங்கிய வெளிநாட்டு நட்புறவு நாடுகளுக்கிடையில் சர்வதேச உறவுகளை பலப்படுத்துவதற்காகவும் கௌரவ சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டார்.

- சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) நிர்வாகி திருமதி சமந்தா பவர் அவர்கள், 2022 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் பெருளாதார நெருக்கடி மட்டுமின்றி அரசியல் மறுசீரமைப்புக்கள் தொடர்பாக தற்போதைய சனாதிபதியவர்கள் மற்றும் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டினார். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக மற்றும் உணவுப் பற்றாக்குறை தொடர்பில் (USAID) வழங்கும் உதவிகளை மேலும் பலப்படுத்தல் தொடர்பாக அவர் கவனம் செலுத்தினார்.

2) பாதுகாப்பான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புதல்

உணவுப் பாதுகாப்பு

- உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக சனாதிபதி அலுவலகம் மூலம் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி உணவுப் பாதுகாப்பு பிரிவினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்பிரிவு மூலம் பல்துறை பங்களிப்புடன் நாடு பூராவும் வீடு வீடாக முன்னெடுக்கப்படும் முயற்சியை மேற்கொண்டு உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான விரிவான பல்துறை ஒன்றிணைந்த பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

- அப்பல்துறை ஒன்றிணைந்த பொறிமுறையின் பிரகாரம் விவசாயத் துறையின் அனைத்து உள்ளீடுகள் மற்றும் உற்பத்திச் செயன்முறை தொடர்பான திட்டங்களை மீளாய்வு செய்து அங்கீகரிப்பதற்காக விரிவான பங்கேற்புடன் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு திட்டங்களை தயாரிப்பதற்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் 14,022 கிராமங்களில் பொருளாதார எழுச்சித் திட்டங்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறிமுகம் செய்யப்பட்ட பல்துறை ஒன்றிணைந்த பொறிமுறை காரணமாக ஒட்டுமொத்த உணவு உற்பத்திச் செயன்முறையை ஏதேனும் அமைப்பு ரீதியான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு முடிந்ததுடன் உணவுத் துறையில் நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்படவிருந்த வாய்ப்புக்களைப் பெரிதும் குறைப்பதற்கு முடிந்தது.

- அவ்வாறே பல்துறை ஒன்றிணைந்த பொறிமுறை மூலம் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட உதவியுடன் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலைமைக்கு ஆளாகிய 61,000 குடும்பங்களுக்கு நிதி வழங்குதல் மற்றும் உலர் உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேசிய சுகாதாரப் பணியகம் மூலம் இனம் காணப்பட்ட கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 4000 சிறுவர்களுக்கு உதவும் வகையில் நன்னடத்தை மற்றும் சிறுவர் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து வளர்ப்பு பெற்றோர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- உள்நாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் ஒரு மில்லியன் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமானது இச்செயன்முறைக்கு உதவும் வகையில் முன்னெடுக்கப்பட்டது. சிறுவர்கள் மத்தியில் போசாக்கு குறைபாட்டை ஒழிப்பதற்காக கல்வி அமைச்சு, உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகள் மற்றும் தனிப்பட்ட நன்கொடை வழங்குணர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து சகல ஆரம்ப பாடசாலைகளிலும் பகலுணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மேம்படுத்தப்பட்டது. 1.08 மில்லியன் மாணவர்களை இலக்காக கொண்டு 7,926 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை தனியார் அளிப்புக்களைப் பயன்படுத்தி மேலும் சுமார் ஒரு மில்லியன் பாடசாலை மாணவர்கள் நன்மையடையும் விதத்தில் விரிவாக்குவதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் கௌரவ சனாதிபதியவர்களால் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் நடமுறைக்கு வரத்தக்க விதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- 2022 ஆம் ஆண்டு பெரும்போகத்துக்கு தேவையான உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் எரிபொருளை வழங்குதலை தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்வதற்கும் நெற் பயிர்ச்செய்கைக்காக மாத்திரம் அரசாங்கத்தால் உரம் வழங்குவதற்கும் அந்த உரத்துக்கான தேவைப்பாட்டில் 70% சதவீத உரத்தை இரசாயன உரமாகவும் 30% சதவீத உரத்தை சேதனப் பசளையாகவும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

- நெற்பயிர்ச்செய்கைக்குத் தேவையான 141,542 மெட்ரிக் டொன் யூரியா உரம், ரிபல் சுபர் பொஸ்பேட் (TSP) 37,428 மெரிக் டொன், மற்றும் மியூரேட் ஒப் பொடேஸ் (MOP) 6,674 மெட்ரிக் டொன்களை வெளிநாட்டுக் கடனுதவியின் கீழ் உரிய காலப்பிரிவுக்குள் பெற்றுக்கொள்வதற்காக சனாதிபதி அலுவலகம் தலையிட்டது. அதன் பிரகாரம் உலக வங்கியினால் (WB) 110 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி உள்ள 150,000 மெட்ரிக் டொன் யூரியா உரம், ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மூலம் 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி உள்ள 36,000 மெட்ரிக் டொன் யூரியா MOP உரம், உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மூலம் 13.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி உள்ள 18,000 மெட்ரிக் டொன் யூரியா (FAO) உரம், இந்திய எக்சிம் வங்கி மூலம் 65.0 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி உள்ள 65,000 மெட்ரிக் டொன் யூரியா உரம் வழங்கப்பட்டது

- உணவு உற்பத்தி செயற்பாட்டில் மிக முக்கியமான ஒரு கடமைப் பொறுப்பை நிறைவேற்றும் சோளப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான 12,000 மெட்ரிக் டொன் யூரியா உரத்தினை 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலும் மியூரேட் ஒப் பொடேஸ் உரத்தை நவம்பர் மாதத்திலும் கமத்தொழில் சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக விநியோகிப்பதன் மூலம் பெரும்போகத்துக்கான உரங்களுக்கான தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் சந்தையில் 50 கிலோ கிராம் யூரியா பொதி ஒன்றை 39,000 ரூபாவுக்கும் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான 50 கிலோ கிராம் கலப்பு உரப் பொதி ஒன்றை 17,000 ரூபாவுக்கும் போதுமான அளவு தனியார் துறையினரிடம் இருந்து கொள்வனவு செய்யக்கூடிய ஆற்றல் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறே தேயிலை மற்றும் காய்கரிகளுக்குத் தேவையான 50 கிலோ கிராம் யூரியா பொதி ஒன்றை 17,000 ரூபா விலைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட்டது.

- 2022 பெரும்போகத்துக்கு தேவையான விவசாய இரசாயன பொருட்களை இறக்குமதி செய்வதற்காக மொத்தம் 53 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு மத்திய வங்கி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசினால் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் டெலிகிரெபிக் பரிமாற்ற வரையறைகள் 50,000 முதல் 250,000 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கப்பட்டது. ஆகவே விவசாயத் துறைக்குத் தேவையான விவசாயப் பொருட்கள் போதுமான அளவு சந்தைக்குள் உட்பாய்ச்சப்படல் நிகழ்ந்தது. இருப்பினும் விவசாய இரசாயன பொருட்களில் நிலவிய உயர்வான விலைகளை விவசாயிகளால் தாங்கிக் கொள்ள முடியாதிருத்தல் தொடர்ந்தும் ஒரு பிரச்சினையாக உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

- 2022/23 பெரும்போகத்தின் நெல் மற்றும் சோளப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான மொத்த எரிபொருள் தேவைப்பாடு 123 மில்லியன் லீற்றர்களாக காணப்பட்டது. எரிபொருள் விநியோகம் தொடர்பில் பிரச்சினை காணப்பட்ட போதும் விவசாய நடவடிக்கைகள் இடம்பெறும் பிரதேசங்களில் போதுமான அளவு எரிபொருட்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- உணவு உறுதிப்பாட்டை பேணுவதற்காக 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் சனாதிபதி அலுவலகத்துடன் இணைந்த "உணவுக் கொள்கைக் குழு "ஒன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அக்குழுவானது ஏற்புடைய அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களின் பங்களிப்புடன் அதற்கு முன்னர் நடைபெற்ற 'வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு' மற்றும் 'உணவுப் பாதுகாப்பு தொடர்பான குழு' ஆகிய குழுக்கள் மீள்தாபிக்கப்பட்டது. அதன் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகிக்கும் மொத்த பொறிமுறையில் நிலவும் சந்தைப் பிரச்சனைகளில் தேவையற்ற விதத்தில் தலையீடுகள் இன்றி முறையாக தீர்ப்பதற்கான ஒரு கொள்கைப் பொறிமுறை முன்னெடுக்கப்பட்டது.

- அதே போன்று இவ்வாறான பொருளாதார நெருக்கடியின் போது உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களைத் தட்டுப்பாடின்றி சந்தைக்கு விநியோகித்தல் போன்றே வாழ்க்கைச் செலவு உயர்வடைவதனை இயலுமான அளவு கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத் தீர்மானம் மேற்கொள்ளல் இக்குழு மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அதன் விளைவாக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியின் பிரகாரம் உணவு மற்றும் மதுசாரம் அல்லாத பான வகுதி தொடர்பில் பதிவாகிய 85.8% சதவீத பணவீக்க மட்டத்தை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியளவில் 59.3% சதவீதம் வரை குறைப்பதற்கு முடிந்தது.

வலுசக்தி பாதுகாப்பு

- வலுசக்தி விநியோகத்தை உறுதியாக வைத்திருப்பதற்காக அரசினால் நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புதல்களுக்கு ஏற்றவாறு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளைத் தருவிப்பதற்கான முறையியல் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் கோட்டா முறையில் கிழ் எரிபொருள் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் விளைவாக 2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் எரிபொருள் வரிசை மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டினை முற்றுமுழுதாக நீக்குவதற்கு முடிந்தது.

- **தொடர்ச்சியான மின்சார விநியோகம்** - தேசிய வலுசக்தி கொள்கையின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சார தேவைப்பாட்டில் 70% சதவீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க மின்சார மூலங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆண்டாக 2022 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். இந்திய அரசின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியக் கருத்திட்டம், சாம்பூர் 50MW சூரிய சக்தி மின்சார நிலையம், இந்திய இலங்கை கிரிட் தொடர்பினை ஏற்படுத்தும் கருத்திட்டம் மற்றும் யாழ்ப்பாண குடாநாட்டில் 03 தீவுகளில் உள்ள மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான மீள் புதுப்பிக்கத்தக்க கலப்பு மின்சார நிலையக் கருத்திட்டத்தை ஆரம்பித்தல் போன்றன ஜனாதிபதி அலுவலக மட்டத்தில் ஒருங்கிணைப்பு செய்த அவ்வாறான கருத்திட்டங்களில் அடங்கும்.

- அவ்வாறே 2023 ஆம் ஆண்டின் இறுதிவரை உறுதியான எரிவாயு விநியோகத்தைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி விநியோகத்தையும் ஸ்திரப்படுத்த முடிந்தது.

- அவ்வாறே சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவுபடுத்தல் மற்றும் நவீனமயப்படுத்துவதற்காக இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையே இருபக்க பொருளாதார ஒத்துழைப்பினை ஏற்படுத்த முடிந்தது.
  - கட்டுப்பாட்டுடன் கூடிய வகையில் எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு இயலுமான வகையில் இல்லத்திரனியல் பங்கீட்டு முறை ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
  - மின்சாரம் கொள்வனவு செய்வற்கான கட்டணம் மற்றும் நுகர்வோர் கட்டணங்களை மீளாய்வு செய்து தற்போதைய சந்தையின் நிலைமைக்கு இசைவாக விலை முறைமை ஒன்றை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்காக மின்சார சபைச் சட்டத்தை துரிதமாக திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
  - மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய மின்சார முறைமையுடன் (National Grid) இணைக்கும் போது ஏற்படும் தாமதங்களுக்கு தீர்வு வழங்குதல்.
  - ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கைத்தொழிலாளர்களுக்கு எரிபொருள் வழங்கும் போது டொலர் மூலம் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்குதல்.
  - இலங்கையில் எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்காக ஏனைய தரப்பினர்கள் / முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், எரிவாயுக்காக உலக வங்கி உதவியின் கீழ் இலங்கை லிட்ரோ எரிவாயு கம்பனிக்கு தேவையான எரிவாயு பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஒப்பந்தம் மேற்கொள்ளும் பணிகளை மேற்கொள்ளல்.
  - 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மின்சார துண்டிப்பினை முற்றாக முடிவுக்கு கொண்டு வரும் வகையில் மின்சார துண்டிப்பை நாள் ஒன்றுக்கு 140 நிமிடங்களாக குறைந்த நேர அளவு மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு அதன் மூலம் முடிந்தது.

சூழல் பாதுகாப்பு தொடர்பான அளவுகோள்

- கௌரவ சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2022 செப்டம்பர் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை ஐக்கிய இராஜ்யத்திற்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது இலங்கையின் தேசிய காலநிலை மாற்றக் கொள்கை தொடர்பில் தனது திட்டத்தை முன்வைத்தார். இலங்கையின் காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை தாபிபிப்பதற்கான முன்மொழிவு தொடர்பில் பொதுச் செயலாளருக்கு அதன் போது விடயங்கள் முன்வைக்கப்பட்டன. காலநிலை மாற்றங்களுக்கு எதிராக போராடுவதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பொதுநலவாய நாடுகளின் உதவிகளை தொடர்ந்தும் வழங்குவதாக பொதுச்செயலாளர் உறுதியளித்தார்.

- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் 2022 செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது நாட்டில் நிலவும் உணவு மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக தூதுவருக்கு விளக்களித்து அதனை எதிர்கொள்வதற்காக ஐக்கிய நாடுகளின் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மூலம் வழங்கப்படும் ஒத்துழைப்பு தொடர்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

- 2022 செப்டம்பர் 28 முதல் 30 வரை பிலிப்பைன்ஸில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) 55 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பிலிப்பைன்சுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி கௌரவ சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வலியுறுத்தியதுடன் காலநிலை மாற்றங்கள் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியினை இலங்கைக்கு வழங்குமாறும் கௌரவ சனாதிபதியவர்கள் பரிந்துரைத்தார்.

பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு

பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருளினால் அவதிப்படாத, அச்சம் மற்றும் சந்தேகம் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கான இரண்டு புதிய சட்டமூலங்களை 2023 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஆரம்ப பணிகளை நீதி மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்பு மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம், போதைப்பொருள் ஒழிப்புக்காக கட்டளையிடும் தலைமையக சட்டம் ஆகியனவே அவை ஆகும். அவ்வாறே 2023 ஆம் ஆண்டு தற்போதைய சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அரச பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு முடியுமான ஒரு தேசிய பாதுகாப்புக் கொள்கையினை தயாரிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன

3) மக்களிடம் பயனுள்ளவாறு அணுகுதல்

ஒவ்வொரு பிரசைக்கும் குறித்தொதுக்கப்பட்ட பொருளாதார உறுதிப்பாடு, அபிவிருத்தியடைவதற்கான சம வாய்ப்பு மற்றும் கௌரவமான ஒரு வாழ்க்கை ஆகியவற்றை வழங்கும் உரிமையை உறுதிப்படுத்தும் மக்கள் மைய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக தற்போதைய சனாதிபதி அவர்களால் குறித்தொதுக்கப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி துறை தொடர்பில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்குதல், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் முயற்சியின் போது வறுமை, மற்றும் குறைந்தளவு சலுகைகளை அனுபவிக்கும் குழுக்களைக் கவனித்தல் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல், நாட்டின் தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களின் திறமையின் அடிப்படையில் முன்னேறுவதற்கான மார்க்கங்களை மேலும் விரிவுபடுத்தல், விரிவான ஒரு நடுத்தர வகுப்பினரை உருவாக்குவதற்கு தேவையான அடிப்படையை உருவாக்குதல் ஆகியன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சமூகப் பாதுகாப்பு

- கடினமான பொருளாதார நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி, முதியோர், அங்கவீனமுற்ற தனிநபர் / சிறுநீரக நோயாளிகள் / அனர்த்தங்களுக்கு ஆளான குடும்பங்கள் போன்ற நிவாரணம் வழங்கும் அனைத்து செயற்பாடுகளையும் செயற்திறனுடன் அனுப்புவதற்காக வங்கி கணக்கிற்கு மற்றும் நேரடியாக அனுப்பும் முறை ஒன்றை தயாரித்தல், முதியோர்கள், அங்கவீனமுற்ற நபர்கள் போன்றே சட்ட ரீதியான வருமானம் பெறும் விதவைகளை வீட்டுத் தொழில் மய்றசியாளர்கள் என்ற ரீதியில் பலப்படுத்தல், வறுமை மற்றும் குறைந்த அளவு சலுகைகளை அனுபவிக்கும் குழுக்களைக் கவனித்து மற்றும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து உருவாக்கும் சமூக சந்தை பொருளாதார முறைக்குத் தேவையான அடிப்படையினை தயாரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை ஏற்புடைய அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அனைத்து இனங்களினதும் பங்களிப்பினை உறுதிசெய்தல்

- ஆண்-பெண் பால்நிலை வேறுபாடு மூலம் மற்றும் பிள்ளைகள் தொடர்பில் ஏற்படும் சிக்கலான நிலைமைகளைத் தடுப்பதற்காக பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுச் சட்டம், ஆண்-பெண் சமத்துவ சட்டம், பெண்களை வலுவூட்டும் சட்டம் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டம் ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கும் பெண்கள் மற்றும் ஆண்-பெண் பால்நிலை தொடர்பான நிறுவனத்தை தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக அப்பிரதேசங்களில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் 21 ஆம் நூற்றாண்டுக்கு தேவையான சமூக மற்றும் பொருளாதார மாற்றங்கள் பற்றி கருத்திற் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக புதிதாக திட்டங்களை தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசேடமாக கௌரவ ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் நியமிக்கப்பட்ட குழு மூலம் **"உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை"** ஐ ஓர் என்னக்கருவாக ஏற்றுக்கொள்ளல், அதனை நடைமுறைப்படுத்தும் முறையியல் மற்றும் சட்டத்தை அறிமுகம் செய்தல் மற்றும் தேவையான ஏற்பாடுகளை வழங்குவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று 2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை சட்டரீதியாக தாபித்தல் மற்றும் பொறிமுறையை நடைமுறைப்படுத்தலை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- அரசு நிர்வாகத்துக்கான அனைத்து இனங்களையும் கலந்து கொள்ளச் செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைத் தீர்மானிப்பதற்காக ஜனசபை முறையை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த எண்ணக்கருவை முன்னெடுப்பதற்காக ஏற்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அனுமதி கிடைத்த காரணத்தால் ஜனசபைச் செயலகம் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

- அவ்வாறே தேசிய பாதுகாப்பினை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரிவான பங்கேற்புடன் மேற்கொள்ளும் முகமாக அரசியல் தலையீடுகள் பல ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசேடமாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல அரசியல் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றினை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த தேசிய சபை இரண்டு உப குழுக்களாக செயற்பட்டு தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் விரிவான பங்கேற்பினை உறுதிசெய்வதற்குத் தேவையான பங்களிப்பினை வழங்கி வருகிறது.

- அவ்வாறே சர்வகட்சி மாநாட்டினைக் கூட்டி பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல கட்சிகளதும் கருத்துக்கள் மற்றும் ஒத்துழைப்பினைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைக்காக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. விசேடமாக மதத் தலைவர்கள், அனைத்து இனங்கள், இளைஞர் சமுதாயம், அனைத்து கட்சிகள் மற்றும் குழுக்கள், தொழில் வாண்மையாளர்கள், வெளிநாட்டில் உள்ள இலங்கை தமிழ் சமூகம் உள்ளிட்ட அனைத்து தரப்பினர்களின் ஒத்துழைப்பினை தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்காக பயனுள்ளவாறு பயன்படுத்துவது தொடர்பில் 2022 ஆம் ஆண்டு வெற்றிகரமாக கவனம் செலுத்தப்பட்டது. விசேடமாக வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பினை நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் உள்ளடக்குவதற்காக வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் அலுவல்களுக்கான அலுவலகம் (OOSLA) சனாதிபதி அலுவலகத்துடன் இணைந்ததாக தாபிக்கப்பட்டது.

4) நிறுவனம்சார் மீள்கட்டமைப்பு

பொருளாதார உறுதிப்பாட்டு செயன்முறையில் அரச நிதி உறுதிப்பாடு மீது விசேட கவனம் செலுத்தி பொருளாதாரத்தின் அனைத்து துறைகள் ஊடாக விரிவான மறுசீரமைப்பினை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

- அதன் பிரகாரம் 2022.09.05 திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அரச தனியார் கூட்டுமுயற்சிக்கான நிறுவனம் (NAPPP) மற்றும் அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைக்கும் பிரிவினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரச நிறுவனங்கள் பலவற்றை மீள்கட்டமைப்பதற்கான ஓர் உயர்வான போட்டித்தன்மையுடைய செயலாற்றுகையை உருவாக்குவதற்கும் நட்டத்தில் இயங்கும் அரச தொழில் முயற்சிகளுக்காக பேண்தகு வருமான முறைகளை அறிமுகம் செய்வதற்கும் அப் பிரிவு மூலம் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே தேசிய கடன் முகாமைத்துவ முகவர் நிறுவனத்தை தாபிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வதேச நிபுணத்துவ நிறுவனத்துடன் ஆரம்ப கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் இப்புதிய நிறுவன முறைமையின் மூலம் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.


- பூரண சுயாதீனம் கொண்ட பாராளுமன்ற வரவு செலவு அலுவலகம் ஒன்றைத் தாபிப்பதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு 2022.12.05 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் குறித்த பாராளுமன்ற வரவு செலவு அலுவலகத்தை சட்டரீதியாக தாபிக்கும் பணிகள் நிறைவுசெய்யப்படவுள்ளன.

- சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து சர்வதேச வர்த்தக கலந்துரையாடல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றை 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் சட்டரீதியான அங்கீகாரத்துடன் தாபிப்பதற்கான வழித்தட வரைபடம் ஒன்றுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது அதன் மூலம் பூகோள சந்தையில் போட்டி போடுவதற்கு இலங்கைக்கு உள்ள திறமை அதிகரித்தல் மற்றும் பூகோள சந்தையில் பிரவேசித்தல் விருத்தியடைதல் எதிர்பார்க்கப்படுகிறது.

2.2 எதிர்கால கண்ணோட்டம்

இலங்கை 2048 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் நூற்றாண்டு நினைவு தினத்தை நெருங்கும் வேளை இலங்கையை வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடாக மாற்றமடையச் செய்தலை அரசின் இலக்காக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு ஏற்புடையதாக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் மூலம் தற்போது உள்ள சந்ததியினர் மட்டுமின்றி எதிர்காலத்தில் வரவுள்ள பல சந்ததியினரதும் முன்னேற்றம் இலக்கு வைக்கப்பட்டுள்ளதனால் அந்த வேலைத்திட்டமானது பொருளாதாரத்தை போட்டித் தன்மை நிறைந்த திறந்த மற்றும் சமூக நீதியை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படும் ஓர் அபிவிருத்திக்கு வழிகாட்டுவதாக அமைதல் வேண்டுமென அரசினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள நீண்டகால பொருளாதார மையப்புள்ளிகள்



இவ்வாறான நிலைமையில் கீழ் செயற்படும் போது 2022 முதல் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முற்சிகளை முன்னோக்கி வரிசைப்படுத்தி 2023 ஆம் ஆண்டலிருந்து ஆரம்பமாகும் நடுத்தர காலச் சட்டகத்தில் செயற்படும் மூலோபாய வழித்தட வரைபடத்தின் பிரதான அங்கங்களை பின்வருமாறு காட்ட முடியும்;

1) பெரும்பாக பொருளாதார உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்
2) மிகச்சிறந்த பொருளாதார நிர்வாகம் மற்றும் பொருளாதார ரீதியான தீர்மானம் மேற்கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தயாரித்தல்.
3) இலங்கைப் பொருளாதாரத்தின் போட்டித் தன்மையை விருத்தி செய்தல்.
4) சகல இனங்களதும் சமூக ரீதியிலான உள்ளடக்கத்தை உறுதிசெய்தல்.

1) பெரும்பாக பொருளாதார உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்

2025 ஆம் ஆண்டளவில் ஆரம்ப வரவு செலவுத் திட்டத்தில் மிகையினை ஏற்படுத்தல், அதன் பிரகாரம் 2026 ஆம் ஆண்டளவில் உறுதியான பொருளாதார அடிப்படையினை ஏற்படுத்தல், 2032 ஆம் ஆண்டளவில் அரச கடன்களின் அளவை மொத்த தேசிய உற்பத்தியில் 100% சதவீத மட்டத்துக்கு கொண்டுவரல் ஆகியன இலக்கு வைக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொருளாதார, நிதி மற்றும் தாபனப் பிரிவுகளின் சகல மறுசீரமைப்புக்களும் திட்டமிடப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நாடு எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிக்கு நிலையான தீர்வு வழங்குவதற்காக சர்வதேச ரீதியாக பல்வேறு நிதி மற்றும் நிதிக் கொள்கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை மாற்றமடையும் தேவைப்பாடுகள் மற்றும் உள்ளூர் பொருளாதார தேவைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு நெகிழ்ச்சித் தன்மையுடன் தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது.

பெரும்பாக பொருளாதார சட்டகத்தில் பின்வரும் சில மாற்றங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது;

- நீடித்த கடன் வசதியை (EFF) வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் அந்நிய செலாவணி உட்பாய்ச்சப்படுவதை மேலும் கவர்வதற்கும் உதவுவதுடன் உள்நாட்டு அந்நிய செலாவணி சந்தை தொடர்பில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான நடவடிக்கைகள் அந்நிய செலாவணி திரவத் தன்மை மற்றும் உத்தியோகபூர்வ ஒதுக்கினை அதிகரிக்கச் செய்யும்.

- வருமானத்தை அடிப்படையாக கொண்ட அரச நிதி ஒருங்கிணைப்புக்கான (revenue based fiscal consolidation) முறையான வருமான முகாமைத்துவ பொறிமுறை ஒன்றை தாபிப்பதற்கான சட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அது வரி தொடர்பான சனாதிபதி ஆணைக்குழு தாபிக்கப்பட்ட பின்னர் அதன் பரிந்துரை பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

- வரிக் கட்டமைப்பை திருத்துதல் / வரி முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 2023.01.01 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் மூலம் திருத்தப்பட்ட வரிச் சட்டம் IMF மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2023.01.01 திகதியிலிருந்து நடைமுறையில் உள்ளது. இதன் பிரகாரம் ஏற்புடைய வருமான இலக்குகள் அடையப்பெற்று வருகிறது.

- 2025 ஆம் ஆண்டளவில் ஆரம்ப வரவு செலவுத்திட்ட மிகையினைப் பெற்றுக் கொள்வதற்கு வரிக் கட்டமைப்பு, வரிக்காணன அடிபஹபடை மற்றும் வரி வீதத்தை மாற்றியமைத்து புதிய வகை வரிகளை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வரி செலுத்த தவறுவதனைக் குறைப்பதற்கு வரி சேகரிக்கும் பணிகளை செய்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அரச செலவினங்களை பேண்தகு நிலையில் பேணிச் செல்வதற்காக மீண்டெழும் செலவுகுளைக் குறைப்பதற்கும் அத்தியவசியமற்ற அபிவிருத்திச் செலவுகளை வரையறுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- வங்கித் துறை மறுசீரமைப்பு மற்றும் அரச துறை சம்பளச் செலவினம் ஆகியன உயர்வடைவதனை மட்டுப்படுத்தல் போன்ற நிதி உறுதிப்பாட்டுக்கு உதவும் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

2) மிகச் சிறந்த பொருளாதார நிர்வாகம் மற்றும் பொருளாதார தீர்மானம் மேற்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

- **பொருளாதார ரீதியாக மீண்டெழும்/ தாங்கிக்கொள்ளும் ஆற்றலை உறுதிசெய்வதற்காக**

i. எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான தேசிய பொருளாதாரக் கொள்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறித்த வழித்தட வரைபடத்தின் பிரகாரம் செயற்படுவதற்கும் அதன் சரியான அரச நிதி வழிநடாத்தல் செயற்பாட்டை உறுதிசெய்வதற்கும் பூரண சுயாதீனம் கொண்ட பாராளுமன்ற வரவு செலவு அலுவலகம் ஒன்றைத் தாபிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. வரவு செலவு அலுவலகத்தை தாபிப்பதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சசரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ii. அனுமான செலவு முகாமைத்துவத்துக்காக பூச்சிய அடிப்படை வரவுசெலவுத்திட்ட (Zero Based Budgeting) முறை ஒன்றை அடுத்த வரவுசெலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது மேற்கொள்ளல், இதற்காக ஆகக்கூடுதலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறும் 10 அமைச்சுக்களுக்காக செலவு மீளாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட படிமுறைகள் 2023 ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்படும்.

iii. நிதிக் கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளல் தொடர்பில் கூடுதலான சுயாதீனம் வழங்குதல் மற்றும் கூடுதல் சுயாதீனமுள்ள ஓர் நிறுவனம் என்ற வகையில் செயற்படுவதற்கு மத்திய வங்கிக்கு இடமளிக்கும் வகையில் புதிய மத்திய வங்கிச் சட்டத்தை செயல்வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

iv. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தங்களுடன் இணங்கிச் செல்வதற்காக ஊழலுக்கு எதிரான புதிய சட்டங்களைத் தயாரித்தல்.

v. சேவை வழங்களின் நிதிசார் பேண்தகு தன்மையை உறுதி செய்வதற்காக மீட்பு விலையினை நடைமுறைப்படுத்தல் - எரிபொருள் விலை சூத்திரம், இறுதிப் பயனீட்டாளர் மின்சாரக் கட்டணங்களை செம்மையாக்குதல், மின்சார நிவாரணத்தை சரியாக அளவீடு செய்வதற்கு இருப்புக் கொடுக்கல் வாங்கல் கணக்கை (BSTA) அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

vi. அரச தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு - 2017 முதல் 2022 வரை 5 ஆண்டு காலத்திற்குள் உபாய வழிமுறையாக இனம் காணப்பட்டுள்ள 52 அரச தொழில் முயற்சிகள் 443 பில்லியன் ரூபாய் நட்டமடைந்துள்ளன. இவற்றுள் தெரிவுசெய்யப்பட்ட அரச தொழில் முயற்சிகள் தொடர்பில் மறுசீரமைப்புகளைக் கொண்டுவருவதனை நோக்கமாக கொண்டு பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருட்கள் சேவைகளை வழங்குதல், கூடுதலான முதலீடுகளைக் கவரும் போட்டித் தன்மை நிறைந்த வணிகச் சூழல் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அந்த தொழில்முயற்சி காரணமாக அரசுக்கு சுமப்பதற்கு நேரிடும் நிதி ரீதியான சுமையினைக் குறைப்பதற்காக அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு பிரிவு தாபிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் அந்த தொழில்முயற்சிகளை மீள்கட்டமைக்கும் போது வசதி வழங்குதல் மற்றும் அரசு சார்பில் அதன் பகுதிகளை நடாத்திச் செல்வதற்கு அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட தொழில்முயற்சிகள் நிர்வாக கம்பனி (Holding Company) ஒன்றிடம் ஒப்படைக்கப்படும்.

vii. கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தியானது மொத்த தேசிய உற்பத்திக்கும் நேரடி வெளிநாட்டு முதலீடு உட்பாய்ச்சலுக்கும் புதிய தொழில்வாய்ப்பு உருவாக்கத்துக்கும் குறிப்பிடத்தக்க அளவில் செல்வாக்குச் செலுத்தி உள்ளது. இதன் ஆரம்ப உட்கட்டமைப்பு வசதிகள் 2023 ஆம் ஆண்டு இறுதியவில் நிறைவு செய்யப்படவுள்ளன. துறைமுக நகரத்தின் தீர்வையற்ற கட்டடத் தொகுதி (USD Mn 15) 2023 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் 2022 மூன்றாம் காலாண்டில் கொழும்பு சர்வதேச நிதி மத்திய நிலையத்தின் (CIFC) முதலாம் கட்டம் - 3 கோபுரங்கள், விலா தரைப் பகுதி மற்றும் மரீனா ஹோட்டல் ஆகியவற்றின் நிரமாணிப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. 2023 எதிர்பார்க்கப்படும் நிதி உட்பாய்ச்சல் USD Mn 3.11 ஆகும்.

- **நடுத்தர கால உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மூலோபயம்**

i. மேல் மாகாணம், வடமேல் மாகாணம், ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் புதிய பொருளாதார வலயங்களை அமைத்தல், - வகவத்த, பிங்கிரிய, ஹம்பாந்தோட்டை - ஆரபொக்க மற்றும் ஏராவூர்

ii. வலுசக்தி துறையின் மறுசீரமைப்பு - மின்சாரத்துக்கான கேள்வி அதிகரிப்பு ஆண்டுக்கு 5% சதவீதம் ஆகும். உயர்வடையும் கேள்விக்கு ஏற்றவாறு போதியளவு மின்உற்பத்தி இயலளவை அதிகரித்தல் உற்பத்திக்கு தடையின்றி தனியார் முதலீடு மூலம் மேற்கொள்ளப்படும். அமைச்சரவை மூலம் விசேட நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் சட்ட ரீதியான மற்றும் நிறுவனம் சார் மறுசீரமைப்புக்கள் பற்றி ஆராய்ந்து பரிந்துரை முன்வைக்கப்படும்.

iii. இலங்கையின் வலுசக்தி தேவைப்பாட்டை மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் ஒரு முயற்சியாக பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்தும் வழித்தட வரைபடம் தயாரித்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2023 ஏப்ரல் மாதமளவில் தேசிய ஹைட்ரஜன் வழித்தட வரைபடம் தயாரித்தலை நிறைவு செய்வதற்கும் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் சாத்தியக்கூற்று ஆய்வினை நிறைவு செய்வதற்கும் 2024 மற்றும் 2026 காலப்பிரிவுக்குள் முன்னோடி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் 2026 ஆம் ஆண்டு முதல் பசுமை ஹைட்ரஜனை வர்த்தக ரீதியாக பயன்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

iv. வலுசக்தி துறை தொடர்பாக போட்டித் தன்மையை ஏற்படுத்துவதன் ஊடாக வலுசக்தி பாதுகாப்பை உறுதிசெய்தல் - அனைத்து தொழில்முயற்சித் துறைகளும் உள்ளடங்கும் வகையில் துறை தொடர்பான போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. எரிபொருள் விநியோகம் தொடர்பில் மேலும் வழங்குணர்களை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரச-தனியார் கூட்டுக் கருத்திட்ட (PPP) மாதிரியின் கீழ் சுத்திகரிப்பு மற்றும் ஏனைய வசதிகளை அபிவிருத்தி செய்தல் நோக்கமாகவுள்ளது.

- **உள்நாட்டு காலநிலை மாற்றங்கள் தொடர்பான சவால் மற்றும் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்வதற்கான COP27 இன் அர்ப்பணிப்பு.**

i. குறைவான காபன் அபிவிருத்தி மார்க்கங்களுக்கு பச்சைவீட்டு வாயுவை முகாமை செய்தல் மற்றும் கண்காணித்தல், காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்கு ஒத்திசைவடைதல், காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான நிதி, கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வை மற்றும் வசதிகள் வழங்குவதற்காக தேசிய காலநிலை மாற்ற சட்டத்தை திருத்துதல்.

ii. காலநிலை மாற்றங்கள் மற்றும் பசுமை நிதி நடவடிக்கைகளுக்கான செயலகம் ஒன்றை தாபித்தல் - காலநிலை மாற்றங்களுக்கான அலுவலகம், சர்வதேச காலநிலை மாற்றங்களுக்கான பல்கலைக்கழகம், பசுமை நிதி வசதிகளை வழங்குதல் மற்றும் சமுத்திர அவகாசத் திட்டமடல் உள்ளிட்ட உதவிச் சேவைகள் ஆகிய நான்கு துறைகளை இச்செயலகம் உள்ளடக்கும்.

- **தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தலை மேம்படுத்தல்**

டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் உபாயவழிமுறைகள் உள்ளடங்கிய டிஜிட்டல் தொழில்நுட்பச் சட்டத்தை 2023 ஆம் ஆண்டில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் தரவுப் பாதுகாப்பு அதிகார சபை ஒன்றை தாபித்தல், இலத்திரனியல் முறை மூலமாக பணம் செலுத்தப்படுவதை மேம்படுத்தல், வரி முகாமைக்காக டிஜிட்டல் தளத்தைத் தயாரிப்பதற்கு உதவுதல், அறுவடைக்குப் பின்னரான விரயத்தைக் குறைப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை விஸ்தரித்தல் ஆகியவற்றுக்காக சனாதிபதி அலுவலகத்தால் ஏற்புடைய அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

செயற்கை அறிவு (AI) ஆயத்தத்தை அதிகரித்தல் - 2023 இல் விசேட நிபுணத்தவ குழுவொன்றின் மூலம் பெறுமதிச் செயன்முறை ஊடாக செயற்கை அறிவை (AI) அபிவிருத்தி செய்வதற்கான உபாயவழிமுறை மற்றும் வழித்தட வரைபடம் ஒன்றைத் தயாரித்தல். குழுவின் பரிந்துரைக்கு அமைவாக 2024 இல் வழித்தட வரைபடத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 1 பில்லியன் ரூபாய் முதலீடு செய்யப்படும்.

பாதுகாப்பான இலத்திரனியல் கொடுக்கல் வாங்கலுக்கான வசதிகளை வழங்குவதற்காக தேசிய உறுதிப்பாட்டு அதகார சபையை (NCA) தாபித்தல் - NCA ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளது. CSP இல் உட்புகுதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் பூர்த்தியடையும்.

- **காணி மறுசீரமைப்பு**

